www.Padasalai.Net www.TrbTnpsc.com

10 C

Register No. 

# முதல் திருப்புதல் தேர்வு – 2025

காலம் : 3.00 மணி நேரம்

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும் 15x1=15**

1. கரும்பின் நுனிப்பகுதி

அ) துளிர் ஆ) குருத்து இ) முறி ஈ) கொழுந்தாடை

2. பெரிய மீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாது?

அ) பண்புத் தொகை இ) உவமைத் தொகை இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் 'பாக்கம்' என்பது

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

4. பரிபாடல் ...... நூல்களுள் ஒன்று

அ) பத்துப்பாட்டு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு இ) சிற்றிலக்கியம் ஈ) எட்டுத் தொகை

5. ''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ......... வினா. ''அதோ அங்கே நிற்கும்'' என்று மற்றொருவர் கூறியது ...... விடை

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியாவினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. எற்பாடு என்பது

அ) காலை ஆ) நண்பகல் இ) சூரியன் மறையும் நேரம் ஈ) யாமம்

7. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ..........

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

8. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு ........

அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை

9. மேன்மை தரும் அறம் என்பது .......

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

10. ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்பு ............

அ) ஊருக்கு நூறுபேர் ஆ) பிரம்ம உபதேசம்

இ) கங்கை எங்கே போகிறாள் ஈ) உண்மை சுடும்

11. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ...........

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலை நாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்
மீன் விலைப் பரதவர், வெள் உப்புப் பகருநர்,
பாசவர், வாசவர், பல்நிணை விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்;



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) கம்பராமாயணம் ஆ) தேம்பாவணி இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்
13. ஒசுநர்-பொருள் எழுதுக .
அ) வெற்றிலை விற்பவர் ஆ) ஓவியர் இ) தையல்காரர் ஈ) எண்ணெய் விற்பவர்
14. இப்பாடலில் வரும் எதுகைச் சொற்களை எழுதுக.
அ) காழியர், கள்நொடை ஆ) பாசவர், வாசவர் இ) பாசவர், ஒசுநர் ஈ) காழியர், ஆட்டியர்
15. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கம்பர் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) வீரமாமுனிவர் ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II

### பிரிவு-1 (மதிப்பெண்-18)

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **4x2=8**

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
(அ) பூவின் தோற்ற நிலை அரும்பு எனப்படும்.
(ஆ) பொன் ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.
18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
19. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
20. 'கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின் பொருள் கூறுக.
21. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு- 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4x2=8**

22. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.
குறிப்புகள் (1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்
23. கலைச் சொற்கள் தருக.: (அ) Emblem (ஆ) Vowel
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா.
கல், பழம் - இச் சொற்களுக்கான கூட்டப் பெயர்களை எழுதுக
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : ஒலித்த
25. புறத் திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்து.
26. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
27. கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க: விதி- வீதி
28. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

## பகுதி - III

### பிரிவு-I (மதிப்பெண்-18)

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

29. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?

ஆ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?

இ) யாருக்கெல்லாம் தீங்கு வராத வண்ணம் போர் புரிய வேண்டும்?

## பிரிவு-II

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. ''மாளாத காதல் நோயாளன் போல்'' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்குக

34. அடிபிறழாமல் எழுதுக.

''தூசும் துகிரும்'' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

(அல்லது)

''புண்ணியப் புலவீர்'' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடலை எழுதுக

## பிரிவு -3

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

35. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

36. ஆற்றுநீர்ப் பொருள்கோளை விளக்குக.

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி-IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38. அ) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள் வழி விளக்குக.

(அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)


ஆ) நீ வாசித்து மகிழ்ந்த புத்தகம் (நூல்)குறித்த கருத்துகளை உன் நண்பருடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் கடிதம் ஒன்றை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கோவை மாவட்டம். பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பிரகல்யா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளைபாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை பிரகல்யாவாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்.

i) Education is what remains after one has forgotten what one has learned in School - Albert Einstein

ii) Tomorrow is often the busiest day of the Week. - Spanish Proverb.

iii) It is during our darkest moments that we must focus to see the light - Aristotle.

iv) Success is not final, failure is not fatal. It is the Courage to continue that Counts. - Winston Churchill.

## பகுதி-V

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3x8=24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

44. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

''மங்கையராய்ப் பிறப்பதற்கே'' என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

முன்னுரை- கல்பனா சாவ்லா - இளமைப் பருவம் - விண்வெளிப் பயணம் - விண்வெளிச் சாதனைகள் - முடிவுரை

(அல்லது)

குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

முன்னுரை- உழவுத் தொழில் - உழவர் - உழவுத் தொழிலின் இன்றியமையாமை - உடிவர்களை மதித்தல் - உணவினை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com